நிதிக் கோரிக்கை எண். 29-க்கு திரு. கே. எ. வகாப், திரு. சோ, அழகர் சாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

திரு. எம். சுரேந்திரன் : குப்பம்பட்டியிலே அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் பட்டா செய்யப்படவில்லையென்ற குற்றச்சாட்டைச் சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இது வாக்கொடுப்பு நேரம். நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை திரும்பபெறுகிறீர்களா, இல்லையா என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இருக்கையில் இல்லாதலால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 29-பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,16,35,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : 22—3—1973-ம் நாள் எடுத்துக் கொள்ளப்பட அறிவிக்கப்பட்டிருந்த 14-ம் எண் மானியக் கோரிக்கை —சிறைச்சாலைகள் —27—3—1973-ம் நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை நாளைக் காலை 9-10 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.